Private schools in Madurai

* 859 *Q*.—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மதுரை முனிசிபல் டவுன் லிமிட்டில் எத்தனை தனியார் மானேஜ்மெண்டு பள்ளிகள் மூடப்போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள் ?

(ஆ) அவைகளில் எத்தனை பள்ளிகளை முனிசிபாலிடியார் எடுத்துக்கொண்டார்கள் ?

(இ) தனியார் பள்ளியாசிரியர்களை ஸ்தலஸ்தாபன நிர்வாகத்தில் எடுத்துக் கொண்டால், அவர்களுடைய சர்வீஸ், பிராவிடெண்டு பண்டு முதலியவைகள் சேர்த்துக் கொள்ளப் படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) to (*c*) The particulars required have been called for.

MR. SPEAKER : கனம் அமைச்சர் அவர்களின் வேண்டு கோளின்படி 860-ம் நம்பர் கேள்வி ஒத்தி போடப்பட்டிருக்கிறது.

Vacation salary for teachers

* 861 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether any action has been taken to give vacation salary to teachers employed in private schools ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The grant of vacation salary of teachers in secondary schools under private management is to be regulated in accordance with the terms of agreement entered into by the teachers with management. In the case of Elementary Schools under private management, the grant of vacation salary to teachers will be governed by the terms of the service register issued to the teachers by the District Educational Officer.

SRI N. K. PALANISAMI : ஸார், பிரைவேட் மானேஜ் மென்டின்கீழ் இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் 10 வருடம் 15 வருடம் என்று வேலை பார்த்தபின்னும் கூட ஆசிரியர்களை பெர்மனென்ட்டாக்குவது கிடையாது. டெம்பரரியாகவே வைத்துக்கொண்டு ஏப்ரல் மாதம் பிரித்துவிடுவதும் பின்னால் ஜூன் மாதத்தில் சேர்ந்துகொள்வதுமாக இருக்கிறது. இதன் காரணமாக ஆசிரியர்களுக்கு இரண்டு மாதம் சம்பளம் கிடைப்பதில்லை. ஆகவே இம்மாதிரிப்பட்டவர்களை உடனடியாக பெர்மனன்ட் செய்யவேண்டும் என்று சர்க்கார் உத்தரவு பிறப்பிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது இருக்கிற உத்தரவின் பிரகாரம் ஒரு ஆசிரியர் ஒரு பள்ளிக்கூடத்தின் கடைசி நாள் வேலை செய்திருந்தாலும்கூட அதை அடுத்து வருகின்ற வெக்கேஷனுக்கு சம்பளம் கொடுக்கவேண்டும் என்று இருக்கிறது. இதை படித்த ஆசிரியர்களே பயன்படுத்திக்கொள்ள வில்லையென்றால் நாம் என்ன செய்யமுடியும் ?

28th April 1960]

SRI D. S. AUTHIMOOLAM : சில பிரைவேட் மானேஜ்மென்ட் பள்ளிக்கூடங்களில் வழக்கமாக இன்கிரிமென்ட் கொடுப்பதில்லை. வெயிட்டேஜ் மாத்திரம் வேறு பள்ளிக்கூடங்களுக்குப் போகும் போது கொடுக்கிறார்கள். அப்படியில்லாமல் இன்கிரிமென்ட் எல்லா ஆசிரியர்களுக்கும் கிடைக்கத் தக்க வகையில் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

Essay competition in Hindi

* 862 *Q.*—SRI A. VEDARATHNAM கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் கல்லூரி மாணவரிடையே இந்தியில் கட்டுரைப் போட்டி நடத்த உத்தேசித்திருக்கிறதா? அப்படியானால், அதன் விபரம் என்ன?

(ஆ) இந்தி அபிவிருத்திக்காக மத்திய அரசாங்கம் நம் மாநில அரசாங்கத்திற்கு அளித்திருக்கும் உதவி என்ன?

(இ) அவ்வுதவி முழுதும் பயன்படுத்தப்பட்டதா? மேலும் உதவி தேவையா? அப்படியானால் எதற்கு?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) No, Sir.

(ஆ) The exact figures of assistance are not readily available. But assistance is given on the basis of expenditure incurred and is necessary, for meeting the expenditure on the following six schemes :—

(i) Teaching grant for Hindi Prachark Vidyalayas at Madras and Tiruchirappalli.

(ii) Stipends for trainees of Pracharak Vidyalayas at Madras and Tiruchirappalli.

(iii) Grant for appointment of 100 part-time teachers.

(iv) Teaching grant for Rashtra Basha Visharad Vidyalaya at Tiruchirappalli.

(v) Stipends for students of the Rashtra Basha Visharad Vidyalaya.

(vi) Grants for shorthand and typewriting classes.

SRI A. VEDARATHNAM : இந்த இந்தி கட்டுரை எழுதுவதற்காக மத்திய அரசாங்கத்திலிருந்து வருகின்ற இந்த மான்யத்தை நாம் பயன்படுத்திக்கொள்ளாததற்கு என்ன காரணம்? நமது மாநிலத்தில் இந்தியில் கட்டுரை எழுதுவதற்கு யாரும் முன் வரவில்லையா, அப்படியானால் அத்துறையில் நமது அரசாங்கம் ஏன் கவனம் செலுத்தவில்லை, இனிமேலாவது தக்க கவனம் செலுத்த முன் வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM :இதற்காக மதராஸ் யூனிவர்ஸிட்டியும் ஒரு போட்டி வைத்திருக்கிறார்கள். இந்தியில் கட்டுரை எழுதுவதற்கு இதில் மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது.